# வல்வைப் படுகொலைகள் - 1989

## 26ம் ஆண்டு நினைவஞ்சலிகளுடன்...

உலக சரித்திரத்தில் எத்தனையோ வரலாற்றுப் படுகொலைகள் இடம் பெற்றுள்ளன, இன்றும் இடம் பெற்று வருகின்றன.

ஈழத்தமிழர்களாகிய எங்களுக்கும் - ஸ்ரீலங்கா அரசிற்கும் இந்திய அரசிற்கும் சம்பந்தமானவற்றை இங்கு நோக்குவோம். அந்த வகையில் ஆகஸ்ட் 2ம் திகதி 1989ம் ஆண்டு சம்பவங்கள் எம்மால் நினைவுகூரப்பட வேண்டியவையாகும். இது அக்கொடூர சம்பவங்களின் 26வது நினைவு ஆண்டாகும்.

வல்வைப் படுகொலைகளை பத்திராசிரியகளும் சரித்திர நூலாசிரியர்களும் **"அமெரிக்காவுக்கு மைலாய்" "இந்தியாவுக்கு வல்வை"** என்ற அடைமொழிகளினூடாக வரைந்திருந்தனர். அதாவது அமெரிக்க இராணுவத்தால் வியட்னாமில் நடாத்தப்பட்ட **மைலாய் படுகொலைகளையும்,** இந்தியாவில் ஆங்கிலேயரால் அமிர்தரசில் நடத்தப்பட்ட "ஜாலியன்வாலா படுகொலைகளையும்" விட கொடூரமானவை என வர்ணித்திருந்தன.

கிடைத்த தகவல்களின் அடிப்படையில் Aug 2, 3, 4ம் திகதிகளாகிய 03 நாட்கள் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொடூர சம்பவங்கள் வருமாறு. இச்சம்பவங்களிற்காக மக்களிற்கு பொறுப்புக்கூற வேண்டியது இந்திய அரசேயாகும்!

சேதங்கள் வருமாறு

1. படுகொலைகள் - 63
2. வீடு எரிப்புக்கள் - 123
3. கடை எரிப்புக்கள் - 45
4. கடற்தொழில் படகுகளும் மீன்பிடி வலைகளும் எரித்து நாசமாக்கப்பட்டவை - 176

1948ல் ஆங்கிலேயர் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கி சென்றபோதே ஈழத்தமிழர் சிறுபான்மையினர் என்பது அவர்களுக்கு தெரியும். ஆனால் எம்மை நாமே சுயமரியாதையுடன் ஆளுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள், பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பிரிட்டிஸ் அரசாங்கம் தனது சாம்ராஜ்சியத்தில் முதன்முதலில் இலங்கைப் பெண்களுக்கு வாக்குரிமையை பயன்படுத்தும் பெருமையை வழங்கி ஸ்ரீலங்காவிற்கும் பெருமை தேடித்தந்துள்ளது இதற்காக நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். ஆனால் இந்த நிகழ்வு தமது ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் செய்யப்பட்ட சுயநலத்திற்கான பரீட்சை வாக்களிப்பே என்பது பின்பு தான் பலருக்கு தெரியவந்தது. சிறுபான்மையினருக்குரிய பாதுகாப்புக்கான அரசியலமைப்பு சரத்துக்கள் யாவும் பெரும்பான்மை (எப்பொழுதும்) பலம் பொருந்திய சிங்கள இனத்தவர்களினால் புறக்கணிக்கப்பட்டன.

சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே 1915ல் ஏற்பட்ட கலவரத்தை அடக்க (நிறுத்த) வழிசெய்ய சேர்.பொன் இராமநாதன் கப்பல் மூலம் பிரிட்டிஸ் மகாராணியிடம் நேரில் சென்று உத்தரவு பெற்று வந்து இலங்கை வாழ்மக்களுக்கு சமாதான தூதுவராக திகழ்ந்தார். அன்று அவரை பல்லக்கில்

வைத்து சுமந்து வரவேற்ற கதைவேறு. அப்படிப்பட்ட தமிழர்கள் தம்மைத்தாமே சுய கௌரவத்துடன் வாழும் முறைமையை மேற்கொள்ள முடியாது பேரினவாதிகலால் வதைபட்டு வருகின்றனர்.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் பங்கு கொண்டு பேரினவாத அரசுகளுடன் எமது தலைவர்களால் செய்து கொள்ளப்பட்ட "டட்லி செல்வா ஒப்பந்தம்" தொடக்கம் திம்பு பேச்சுவார்த்தை வரையான எந்த ஒப்பந்தமும் பேரினவாதிகளால் செல்லாக்காசாக்கப்பட்டன.

1958ஆம் ஆண்டு இனக்கலவரம் மூலம் தனது கோர முகத்தைக் காட்டப் புறப்பட்ட பேரினவாதம் பல கொடூரசம்பவங்களை காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்து விட்டது. இவை பற்றிய விடயங்களை இங்கு குறிப்பிடுவது இக்கட்டுரைக்கு பொருத்தமற்றது.

அதாவது தமிழ் அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாக்கிரகம் போன்ற அகிம்சை மார்க்கங்கள் யாவும் பயனற்றுப் போன நிலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவ ரீதியில் அடக்கு முறைகளும் இராஜதந்திர ரீதியில் கல்வித் துறையிலும் வேலைவாய்ப்பிலும் சட்ட ரீதியான தரக்கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு தமிழ்ச் சமுதாயமும் இளைஞர் யுவதிகளும் நசுக்கப்பட்டமையே ஆயுதப்போராட்டத்திற்கு வழிகோலியது என்பது பலரும் அறிந்த விடயம்.

**இதில் இந்தியாவின் வகிபங்கு என்ன?** இந்திராகாந்தி அம்மையார் காலத்தில் தனது சுய நன்மைக்காக தமிழ் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்து அவர்களை வாழர்த்துவிட்டது இந்திய அரசு.

ஈழத்தமிழர்களை பலிக்கடாக்கள் ஆக்கியது. 1987 மே மாதம் வடமராட்சி வான் பரப்பில் இரட்சகராக வந்து எமக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டு பாசாங்கு செய்தது. ஈற்றில் I.P.K.F எனும் இந்திய அமைதி காக்கும் படை என்னும் பெயரில் இலங்கைக்குள் புகுந்து போராளிகளை இலங்கை இராணுவத்திற்கு காட்டிக்கொடுத்தும் வல்லைப் படுகொலைகள் போன்ற கொடூர செயல்களில் ஈடுபட்டதும்தான் அவர்களது கைங்கரியங்களாகின.

ஜே.ஆர் மற்றும் ரஜீவ் என்போரால் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தமும் 13வது சரத்தும் படுகின்றபாடுகள் எல்லோரும் அறிந்ததே!

ஏத்தனையோ இராஜதந்திரிகள் ஆண்டாண்டு காலமாக இலங்கைக்கு வருகை தந்தும் 13ஆம் சரத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்த முன்னேற்றமும் இல்லை. மாறாக "சாண் ஏற முழம் சறுக்குவது" போல இச்சரத்து, **சரத்** எனும் நீதிபதியின் தீர்ப்பின் படி வடகிழக்கு இன்று சட்ட பூர்வமாக பிரிக்கப்பட்டுள்ளது.

இத்தனை இன்னல்களுக்கும் காரணமானது இந்திய அரசே! இந்தியா எமக்கு உருப்படியாக ஏதாவது செய்ய முடியாதா? முள்ளிவாய்க்கால் முடிவுகளும் பிரதமர் மோடியின் வருகையும் கூட வீணாணவைதானா?

தந்தை செல்வா கூறியது போல "**தமிழர்களின் தலைவிதியை ஆண்டவன்தான் தீர்மானிக்க வேண்டும்".** என்ற நிலையில் உள்ள எமக்கு இந்தியா என்ன இழப்பீடு செய்யப்போகிறது? படுகொலைகளில் இறந்தவர்களின் ஆத்மாக்களின் சாந்திக்கு எவ்வாறு பரிகாரம் தேடப்போகிறது? தமிழ்நாட்டில் இருந்து எமக்காக ஒலிக்கும் குரல்களும் சுயநலவாதம் கொண்டவைகளா? என இத்தருணத்தில் எம்மை சிந்திக்க தூண்டுகிறது.

இந்தியாவின் உண்மையான கவனத்தை தமிழ்நாடு ஏன் எம்பக்கம் திருப்பக்கூடிய நடவடிக்கைகளை எடுகக்கூடாது?

**ஈழத்திற்காக இன்னுயிர் நீத்த அனைவரதும் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்து நிற்போமாக.**

வல்வை ஜெயம்

(ந.சிவரட்ணம்)